DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.112/2024 | Deposition of Witness for : PW1 |
| Name : மகேஷ் | Father/Husband Name : மணி |
| Age : | Village : கன்னியாகுமரி |
| Taluk : கன்னியாகுமரி | Calling : கொத்தனார் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 June 2026.
Accused present.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது கன்னியாகுமரியில் குடியிருந்து கொத்தானார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. **புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க அரசு தரப்பில் கோரி, அவ்வாறே அறிவிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. கடந்த 29.09.2023 ஆம் தேதி மதியம் 1.30 மணியளவில் ராஜேந்திரன் என்பவருக்கு செலவிற்காக நாசேரத் சென்று ATM ல் இருந்து பணம் எடுப்பதற்காக எனக்கு சொந்தமாக TN 92 F 9133 என்ற Honda 110 CD மோட்டார் சைக்கிளில் நான் ஓட்ட எனக்கு பின்னால் ராஜேந்திரன் என்பவரும் உட்கார்ந்து கொண்டு சமத்துவபுரத்தில் இருந்து புறப்பட்டு தேரிப்பனை வழியாக கடந்து சென்று வெள்ளமடம் வழியாக நாசேரத் செல்வதற்காக வெள்ளமடம் To நாசரேத் ரோட்டில் வைத்தியலிங்கபுரம் விலக்கு அருகே ரோட்டின் இடதுபுறமாக தெற்கில் இருந்து வடக்காக சவாரி செய்து வரும்போது வைத்தியலிங்கபுரம் To நாசரேத் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக வந்த TN 75 0715 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா பொலிரோ பிக்கப் வேனை ஓட்டி வந்த பின்னால் பெயர் விலாசம் கேட்டுக் தெரிந்த பிரகாசபுரம் மேலத்தெரு, வேலாயுதன் மகன் ஆனந்தராஜ் என்பவர் அவர் ஓட்டிவந்த வேனை அதிவேகமாகவும், அஜாக்கிரையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து நான் ஓட்டி வந்த TN 92 F 9133 என்ற பதிவெண் கொண்ட Honda 110 CD என்ற இருசக்கர வாகனத்தின் மீது இடது பக்கம் இடித்து கீழே தள்ளியதில் நாங்கள் இருவரும் நாங்கள் இருவரும் கீழே விழுந்தோம் என்றால் சரியல்ல. அதில் எனக்கு இடது, வலது முழங்கையில் இரத்தக் காயமும், வலது கால் உப்புக்குத்தியில் இரத்த காயமும், இடது கால்

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.02 18:46:14 +0530 

மூட்டில் சிராய்ப்புக்காயமும், இரண்டு உதடுகளிலும் இரத்தக்காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. ராஜேந்தின் என்பவருக்கு தலயின் முன்பக்கத்தில் பலத்த உள்காயமும், வலது கால் மூட்டில் உள்காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அப்போது நானும் எங்களுக்கு விபத்து ஏற்படுத்திய பொலிரோ பிக்கப் வேனை ஓட்டிவந்த எதிரியும் சேர்ந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ராஜேந்திரனை அந்த பொலிரோ பிக் அப் வேனில் ஏற்றி நாசரேத் லூக்காஸ் மருத்துவமனையில் சேர்த்தோம் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சிகிச்சையில் இருந்த ராஜேந்திரன் சிகிச்சை பலனளிக்காமல் 29.09.2023 ஆம் தேதி மதியம் 2.25 மணிக்கு இறந்துவிட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.02 18:46:24 +0530

Judicial Magistrate, Sathankulam.